கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 • இதழ்: 123 • 08-11-2025 • சனி • பக்கம்- 4 • விலை- ரூ.5 • திருச்சி
Volum 01 • Issue: 123 • 08-11-2025 • Saturday • Pages - 4 • Price- Rs. 5 • Trichy

## தொழிலதிபர் அனில் அம்பானி நவ.14ல் ஆஜராக வேண்டும்: அமலாக்கத் துறை சம்மன்




புதுடெல்லி: நவ. 8–

பண மோசடி வழக்கில் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்குமாறு தொழிலதிபர் அனில் அம்பானிக்கு (66) அமலாக்கத் துறை சம்மன் அனுப்பியுள்ளது.

இது குறித்து தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்ததாவது: அனில் அம்பானி தலைமையிலான ரிலையன்ஸ் குழும நிறுவனங்கள் வங்கிகளில் கடன்பெற்று அதனை முறையாக செலவு செய்யாமல் பணமோசடியில் ஈடுபட்டதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இதுதொடர்பாக அமலாக்கத் துறை ஏற்கெனவே சோதனை நடத்தி அனில் அம்பானி குழும நிறுவனங்களுக்கு சொந்தமான ரூ.7,500 கோடி மதிப்பிலான சொத்துகளை முடக்கியுள்ளது.

இந்த நிலையில், பாரத ஸ்டேட் வங்கியில் (எஸ்பிஐ) கடன்பெற்று மோசடி செய்தது தொடர்பாக விசாரணை நடத்த நவம்பர் 14ம் தேதி நேரில் ஆஜராகும்படி அனில் அம்பானிக்கு அமலாக்கத் துறை சம்மன் அனுப்பியுள்ளது.

கடந்த ஜூலை 24ம் தேதி நடைபெற்ற சோதனை தொடர்பாக அனில் அம்பானியிடம் ஆகஸ்ட் மாதம் விசாரணை மேற்கொள்ளப்பட்டு அவர் வெளிநாடு செல்ல தடைவிதிக்கப்பட்டது.

இந்த நிலையில், இரண்டாவது முறையாக அவருக்கு அமலாக்கத் துறை சம்மன் அனுப்பியுள்ளது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

## தமிழ்நாட்டில் வாக்குத் திருட்டு நடக்க விடக்கூடாது!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு



சென்னை: நவ. 8–

கர்நாடகா, ஹரியானா போல் தமிழ்நாட்டில் வாக்குத் திருட்டு நடக்க விடக்கூடாது, வருமுன் காப்பது நமது கடமையாக இருக்க வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார்.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற செங்குன்றம் பேரூராட்சி மன்ற முன்னாள் துணை தலைவர் பாபுவின் இல்லத் திருமண விழாவில் முதல்வர் ஸ்டாலின் கலந்துகொண்டார். விழாவில் பேசிய அவர், "எஸ்ஐஆர் எனச் சொல்லப்படும், ஒரு சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் தமிழ்நாட்டில் தொடங்கியிருக்கிறது. இந்த மாதம் நான்காம் தேதியில் இருந்து டிசம்பர் மாதம் 4ம் தேதி வரையில் அது நடைபெறுகிறது என்பதெல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் இதை எதிர்த்து தமிழ்நாட்டில் அனைத்துக் கட்சி கூட்டத்தைக் கூட்டி நாம் தீர்மானம் போட்டு அந்த அடிப்படையில் உச்ச நீதிமன்றத்திற்கு நாம் சென்றிருக்கிறோம். வழக்கு தொடுத்து, அந்த வழக்கு நடந்து கொண்டிருக்கிறது.

சட்டப் போராட்டம் ஒரு பக்கம் என்று சொன்னாலும், வாக்காளர் பட்டியல் திருத்தப்படும் பணிகள் ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கிறது. அதைக் கண்காணிக்க வேண்டிய மிகப்பெரிய பொறுப்பு நமக்கு இருக்கிறது. அது, இன்றைய நிலையில் மிக மிக அவசியமான ஒன்று என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது. அதற்காக வருகிற நவ.11ம் தேதி மாவட்டத் தலை நகரங்களில் நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் ஆர்ப்பாட்டத்தை நாம் நடத்த இருக்கிறோம் என்ற செய்தியைக் கூட நேற்றைக்கு நீங்கள் பார்த்திருப்பீர்கள்.

எனவே அந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று, நாம் நம்முடைய உணர்வை வெளிப்படுத்த இருக்கிறோம். ஏற்கெனவே வெளியிடப்பட்ட பட்டியல் அடிப்படையில், பி.எல்.ஓ.க்கள் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று படிவங்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள் என்பது உங்களுக்கு தெரியும். இரண்டு நாட்களாகத் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. டிசம்பர் மாதம் 4ம் தேதிக்குள் இந்தப் படிவங்களை நிரப்பி அதைச் சமர்ப்பித்தாக வேண்டும். அவ்வாறு அளிக்கப்படும் பெயர்கள் மட்டும்தான் வாக்காளர் பட்டியலில் இடம்பெறும் என்ற ஒரு நெருக்கடி நிலைஏற்பட்டிருக்கிறது.

தேர்தல் ஆணையத்தைப் பொறுத்தவரைக்கும், டிசம்பர் மாதம் 4ம் தேதி வரையில் மூன்று முறை அவர்கள் வர இருக்கிறார்கள். நாம் வேலைக்குச் சென்று விட்டால், ஏதாவது பணிகளுக்குச் சென்று விட்டால், வீட்டில் இல்லாமல் இருந்தால், நம்முடைய வாக்கு உரிமையை இழக்கும் சூழ்நிலை ஏற்பட்டுவிடும். அதனால், இந்தப் பணி முடிந்த பிறகு ஆன்லைனில் நாம் தொடர்பு கொண்டு சேர்க்கின்ற முயற்சி இருக்கிறது. அது தேர்தல் நேரத்தில் எவ்வளவு பெரிய நெருக்கடி எல்லாம் ஏற்படும் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, குறிப்பாக ஏழை, எளியவர்கள், உழைப்பாளர்கள், கிராம மக்கள் இதனால் கடுமையாக பாதிக்கப்பட இருக்கிறார்கள்.

இது தொடர்பாக ஏதேனும் சந்தேகம் இருந்தால் அதற்கு ஒரு தொலைபேசி எண்ணை தேர்தல் ஆணையம் தந்திருக்கிறது. ஆனால் அதை மட்டுமே நம்பி நாம் ஏமாந்துவிடக் கூடாது. அதனால் தான் நம்முடைய கட்சியைப் பொறுத்த வரைக்கும், நம்முடைய சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழகத்தின் சட்டத்துறைச் செயலாளர் நம்முடைய மூத்த வழக்கறிஞர் இளங்கோ மேற்பார்வையில் உதவி மையம் அமைத்திருக்கிறோம்.

திமுக நிர்வாகிகள் உதவிக்காக ஒரு தொலைபேசி எண்ணையும் அறிவித்திருக்கிறோம். திமுக நிர்வாகிகள் அனைவரும் உங்களுக்கு ஏதேனும் உதவிகள் தேவைப்பட்டால், அந்தத் தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ள வேண்டும். எஸ்ஐஆர் தொடர்பாக எந்தக் குழப்பம் இருந்தாலும் இதில் நீங்கள் கேட்டுத் தெளிவு பெறலாம்.

அதுமட்டுமல்ல, நம்முடைய காங்கிரஸ் பேரியக்கத்தின் இளம் தலைவராக விளங்கிக் கொண்டிருக்கும் ராகுல் காந்தி இதற்காகப் பெரிய போராட்ட இயக்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறார். குறிப்பாக, கர்நாடகா, ஹரியானா பகுதிகளில் எந்த அளவிற்கு வாக்குத் திருட்டு நடந்திருக்கிறது என்றுஎல்லாம் ஆதாரப்பூர்வமாக எடுத்து வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்.

அப்படி ஒரு நிலை தமிழ்நாட்டில் நடக்க விடக்கூடாது. வருமுன் காப்பது நமது கடமையாக இருக்க வேண்டும். இந்தப் பெரும் பொறுப்பை கழகத்தின் பிஎல்ஏ 2க்கள் ஒவ்வொருவரும் செய்தாக வேண்டும். தமிழ்நாட்டின் ஜனநாயகத்தைக் காக்கும் காவலர்களாகத் திமுக பூத் ஏஜெண்டுகள் செயல்பட வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

## பள்ளிகள், மருத்துவமனைகளில் தெரு நாய்கள் நுழையாதவாறு வேலி அமைக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி: நவ.8–

பள்ளிகள், மருத்துவமனைகள், பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், விளையாட்டு மைதானங்கள் உள்ளிட்ட அனைத்து அரசு நிறுவனங்களிலும் தெருநாய்கள் நுழைவதைத் தடுக்க முறையாக வேலி அமைக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

உச்ச நீதிமன்ற நீதிபதிகள் விக்ரம் நாத், சந்தீப் மேத்தா, என்.வி. அஞ்சாரியா ஆகியோர் அடங்கிய அமர்வு பிறப்பித்துள்ள உத்தரவில், "பள்ளிகள், மருத்துவமனைகள், பேருந்து நிலையங்கள், ரயில் நிலையங்கள், விளையாட்டு மைதானங்கள் உள்ளிட்ட அனைத்து அரசு நிறுவனங்களிலும் தெருநாய்கள் நுழைவதைத் தடுக்க முறையாக வேலி அமைக்க வேண்டும்.

விலங்குகளின் எண்ணிக்கையை கட்டுப்படுத்துவதற்கான விலங்கு பிறப்பு கட்டுப்பாடு விதிகள் 2023ன்படி, இத்தகைய வளாகங்களில் இருக்கும் தெருநாய்களைப் பிடித்து அவற்றுக்கு தடுப்பூசி போட வேண்டும். மேலும், அவற்றுக்கு கருத்தடை செய்ய வேண்டும். அதன் பிறகு அவற்றை நியமிக்கப்பட்ட தங்குமிடங்களுக்குக் கொண்டு செல்ல வேண்டும். உள்ளூர் அதிகாரிகள் இதற்கு பொறுப்பேற்க வேண்டும். இந்த இடங்களில் இருந்து பிடிக்கப்படும் தெருநாய்களை அதே இடத்தில் விடக்கூடாது. அவ்வாறு விடுவது, தீர்ப்பின் நோக்கத்தையே சீர்குலைக்கும்.

இந்த உத்தரவுகளை அனைத்து மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகளும் 8 வாரங்களுக்குள் நிறைவேற்ற வேண்டும். தெருநாய்களை கட்டுப்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக அனைத்து மாநில அரசுகள் மற்றும் யூனியன் பிரேதச அரசுகள் அடுத்த விசாரணை தேதிக்கு முன்பாக பிரமாணப் பத்திரங்களை தாக்கல் செய்ய வேண்டும். இவ்விஷயத்தில், எந்த ஒரு மெத்தனமும் தீவிரமாகக் கருதப்படும்.

தேசிய நெடுஞ்சாலைகள், சாலைகள் மற்றும் விரைவுச் சாலைகளில் இருந்து தெரு நாய்கள் அகற்றப்படுவதை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும். தவறுகளுக்கு அதிகாரிகள் பொறுப்பேற்க வேண்டும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கமல்ஹாசன் பிறந்தநாள்: முதல்வர் ஸ்டாலின், அன்புமணி உள்ளிட்டோர் வாழ்த்து

சென்னை: நவ.8–

நடிகரும், மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவருமான கமல்ஹாசனின் பிறந்தநாளை முன்னிட்டு, முதல்வர் ஸ்டாலின், வைரமுத்து, அன்புமணி உள்ளிட்டோர் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

முதல்வர் ஸ்டாலின்: பன்முகத்திறமையோடு தமிழ்த் திரையுலகை உலகத் தரத்துக்குக் கொண்டு சென்றிடும் தீராத கலைத்தாகமும் பன்முகத்தன்மை மிக்க நம் நாட்டை நாசகர பாசிச சக்திகளிடமிருந்து மீட்கும் தணியாத நாட்டுப்பற்றும் கொண்டு, என் மீது அளவற்ற அன்போடு தோழமை பாராட்டும் மக்கள் நீதி மய்யத்தின் தலைவர் ஞ கலைஞானி கமல்ஹாசனுக்கு அன்பு நிறை பிறந்தநாள் வாழ்த்துகள்.

நாடாளும் ஆட்சியாளர்கள் நெறி பிறழாது நடந்திட, நாடாளுமன்றத்தில் முழங்கிடும் தங்களது அரசியல் தொண்டும் திரையாளும் தங்களது கலைத் தொண்டும் மென்மேலும் சிறந்திட வாழ்த்துகிறேன்.

உதயநிதி ஸ்டாலின்: இந்திய கலையுலகின் தன்னிகரற்ற ஆளுமை கலைஞானி மாநிலங்களவை உறுப்பினரும் மக்கள் நீதி மய்யத்தின் தலைவருமான கமல்ஹாசன் சாருக்கு எனது இனிய பிறந்தநாள் வாழ்த்துகள்!

எதிர்ப்புகளுக்கு அஞ்சாமல் பாசிசத்துக்கு எதிராக மக்கள் மன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் ஓங்கி ஒலிக்கும் கமல் சாரின் குரல் வெல்லட்டும். அவரது அரசியல் பயணம் மென்மேலும் சிறக்கட்டும். அன்பும் வாழ்த்தும்!

அன்புமணி ராமதாஸ்: மக்கள் நீதி மையம் கட்சியின் தலைவரும், எனது நண்பருமான உலக நாயகன் கமல்ஹாசனுக்கு இனிய பிறந்தநாள் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அவர் நூறாண்டு நோயில்லா நிறைவாழ்வு வாழவும், சாதனைகளை படைக்கவும் வாழ்த்துகிறேன்.

வைரமுத்து: இந்தியக் கலைஅடையாளங்களுள் ஒருவர் கலைஞானி கமல்ஹாசன். கலையே வாழ்வாய்; வாழ்வே கலையாய்; மாறிப்போன மனிதர்.

வாழ்வியல் புயல்களையும் விமர்சனச் சூறாவளிகளையும் தாண்டி அவர் என்ன காரணங்களுக்காகக் கொண்டாடப்படுகிறாரோ அந்தக் காரணங்கள் வாழ்வெல்லாம் நிலைத்திருக்க வாழ்த்துகிறேன்.

## என் மீது சுண்டுவிரல் பட்டாலும் அன்புமணியும், சவுமியாவும்தான் காரணம்: ராமதாஸ் கருத்து



விழுப்புரம்: நவ. 8–

'என் மீது சுண்டு விரல் பட்டாலும் அதற்குக் காரணம் அன்புமணியும் சவுமியாவும் தான்' என பாமக நிறுவனர் ராமதாஸ் தெரிவித்தார். திண்டிவனம் அடுத்த தைலாபுரத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: அன்புமணியை மத்திய சுகாதாரத் துறை அமைச்சராக்கியது மற்றும் பாமக தலைவராக்கியது என அரசியலில் இரு தவறுகளை செய்து விட்டேன்.

அமைதியாக பாமகவை நடத்தி கொண்டிருந்த நிலையில், ஒரு பிளவு ஏற்பட்டிருக்கிறது என மக்களும், பிற கட்சியினரும் நினைக்கும் அளவுக்கு அன்புமணியின் பேச்சும், செயலும் அருவருக்கத்தக்க வகையில் உள்ளது. 5 எம்எல்ஏக்களில் என்னுடன் இருவர் உள்ளனர்.

அன்புமணி கும்பலிடம் 3 பேர், தெரியாமல் சென்று விட்டனர். நான் நடத்திய போராட்டங்களில் வன்முறை இருக்காது. எங்களை விமர்சித்தவர்களுக்குக்கூட நாகரிகமாகப் பதில் சொல்வோம். ஆனால், என்னைப் பற்றியும், ஜி.கே. மணியைப் பற்றியும் சமூக வலைதளங்களில் கேவலமாக பேசுவதற்கு அன்புமணி தூண்டி விடுகிறார். கத்தி, வீச்சரிவாள் வைத்திருக்கும் அன்புமணி கும்பல், துப்பாக்கியை எப்போது ஏந்துவார்கள் என தெரியவில்லை.

வன்முறையுடன் அன்புமணி பேசுவதால், அதை செய்து பார்க்க வேண்டும் என அவருடன் இருப்பவர்கள் கத்தியை எடுக்கின்றனர். ஒரு கும்பலை வைத்துக்கொண்டு, அது தான் கட்சி என்று அன்புமணி சொல்லி வருகிறார். தமிழகம் அமைதி பூங்காவாகத் திகழ வேண்டும் என்று நண்பர் கருணாநிதி அடிக்கடி கூறுவதுண்டு.

கத்தியை வைத்துக் கொண்டு கொலை மிரட்டல் விடுப்பது சரியில்லை. எந்த நிலையிலும் எதிர்வினை யாற்றக் கூடாது என என் பாமக சொந்தங்களை கேட்டுக் கொள்கிறேன். என் மீது சுண்டு விரல் பட்டாலும் அன்புமணியும், சவுமியாவும்தான் காரணம். அன்புமணியும், அவரது கும்பலும் திருந்த வேண்டும். 'தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், இறுதியில் தருமமே வெல்லும்.'

பாமக பொதுக்குழு கூட்டம் டிச.30ம் தேதி தலைவாசலில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் தேர்தல் கூட்டணி மற்றும் கட்சியின் வளர்ச்சி குறித்து கருத்து கேட்கப்பட்டு, முடிவெடுக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

## வந்தே மாதரம் பாடலின் 150 ஆவது ஆண்டு விழா.. ஈரோட்டில் பாஜக சார்பில் சிறப்பாக கொண்டாடப்பட்டது..



ஈரோடு. நவ., 08

வந்தே மாதரம் பாடலின் 150 ஆவது ஆண்டு விழா ஈரோட்டில் பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் சிறப் பாக கொண்டாடப் பட்டது.

இந்திய தேசிய கீதமாக அனைவராலும் வணங்கப்படும் வந்தே மாதரம் பாடல் இயற்றப்பட்டு 150 ஆண்டுகள் ஆகிறது.

இதனைத் தொடர்ந்து இந்திய பிரதமர் நரேந்திர மோடி தனது மங்கி பாத் நிகழ்ச்சியில் வந்தே மாதரம் 150 வது ஆண்டு விழாவை இந்தியா முழுவதும் சிறப்பாக கொண்டாட வேண்டும் என வேண்டுகோள் விடுத்து இருந்தார்.

இதனைத் தொடர்ந்து ஈரோடு மாவட்டம் மொடக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி, சிவகிரி பேரூராட்சியில் உள்ள சுதந்திர போராட்ட வீரர் தியாகி திருப்பூர் குமரன் சிலை முன்பு அனைவரும் ஒன்றிணைந்து வந்தே மாதரம் பாடலை பாடியும், தேசிய ஒருமைப்பாடு உறுதிமொழியை எடுக்கும் நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் மொடக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் சி. சரஸ்வதி, ஈரோடு தெற்கு மாவட்ட பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் எஸ் எம் செந்தில் மற்றும் பாரதிய ஜனதா கட்சியின் நிர்வாகிகள், கூட்டணி கட்சியான அதிமுக தமிழ் மாநில காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டு தியாகி திருப்பூர் குமரன் மற்றும் சுதந்திரப் போராட்ட மாவீரர் தீரன் சின்ன மலை ஆகியோரின் திரு உருவ சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை.

தொடர்ந்து இந்திய தேசிய கொடியை ஏந்தி அனைவரும் பேரணியாக சென்று வந்தே மாதரம் பாடலை பாடினார்.

# புதுச்சேரி வில்லியனூர் திருக்காமீஸ்வரர் கோவிலுக்கு புதிய தேர் செய்ய ஸ்தபதிக்கு பணி ஆணை முதல்வர் ரங்கசாமி வழங்கினார்



புதுச்சேரி, நவ. 8–

புதுச்சேரி மாநிலம், வில்லியனூரில் அமைந்துள்ள ஸ்ரீ கோகிலாம்பிகை உடனுறை திருக்காமீஸ்வரர் திருக் கோயிலுக்கு புதிதாக தேர் செய்ய உத்தேசித்து புதுச்சேரி அரசால் அமைக்கப்பட்ட தொழில்நுட்ப வல்லுநர் குழு மூலம் 2 கோடியே 64 லட்சம் ரூபாயில் மதிப்பீடு தயார் செய்து முதல்வர் ரங்கசாமி மற்றும் தலைமை பொறியாளர் ஆகியோர் ஒப்புதலோடு தகுதி வாய்ந்த ஸ்தபதிகள் மற்றும் சிற்பிகளிடமிருந்து குறைந்த விலைப் புள்ளி ஒப்பந்தம் கோரப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தில் கலந்து கொண்ட 10 ஸ்தபதிகளில் தகுதி வாய்ந்த 2 ஸ்தபதிகள் தேர்வு செய்யப்பட்டு அதில் குறைந்த விலைப் புள்ளி குறிப்பிட்டிருந்த வரதராஜன் என்ற ஸ்தபதி தேர்வு செய்யப்பட்டார்.

புதிய தேர் செய்ய தேர்வு பெற்ற ஸ்தபதிக்கு சட்டப்பேரவையில் புதுச்சேரி முதலமைச்சர் ரங்கசாமி அவர்கள் நேற்று அதற்கான பணி ஆணையை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா, தலைமைப் பொறியாளர் வீர செல்வம், கண்காணிப்பு பொறியாளர் சுந்தரமூர்த்தி, உதவி பொறியாளர் செல்வராசு, தொழில்நுட்ப வல்லுநர் குழுவினர், திருத்தேர் திருப்பணிக் குழுவினர், திருக்கோயில் நிர்வாக அலுவலர் ஆகியோர்கள் உடனிருந்தனர்.

# இரண்டாம் நிலைக் காவலர்கள் தேர்வு எழுதுபவர்கள் பின்பற்ற வேண்டியவைகள் குறித்து அரியலூர் மாவட்ட காவல்துறை செய்தி வெளியீடு

அரியலூர். நவ. 8–

தமிழ்நாடு சீருடை பணியாளர் தேர்வு வாரியம் சார்பாக அரியலூர் மாவட்டத்தில் 2025 ஆம் ஆண்டிற்குரிய இரண்டாம் நிலை காவலர்கள், இரண்டாம் நிலை சிறைக்காவலர்கள் மற்றும் தீயணைப்பாளர்கள் ஆகிய பதவிகளுக்கான பொது தேர்வு வருகின்ற 09.11.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று, தத்தனூர் மீனாட்சி ராமசாமி கல்வி வளாகத்தில் நடைபெறுகின்றது.

அரியலூர் மாவட்டத்தில் 2773 பேர் இத்தேர்வினை எழுத உள்ளனர். அதன்படி தேர்வு நடைபெறும் நாளான 09.11.2025 அன்று காலை 8.00 மணியில் இருந்து 09.30 மணி வரை மட்டும் தேர்வு எழுதுபவர்கள் வளாகத்திற்குள் அனுமதிக்கப்படுவார்கள். தேர்வு எழுதுபவர்களை தவிர மற்றவர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

மேலும் தேர்வு எழுதுபவர்கள் கருப்பு நிற பந்து முனை பேனா (ball point pen), தேர்வு நுழைவு சீட்டு (hall ticket), மற்றும் அசல் அடையாள அட்டையான (identity card) ஆதார் கார்டு, வாக்காளர் அட்டை, ஓட்டுனர் உரிமம் முதலியவைகளில் ஏதேனும் ஒன்றை கட்டாயம் எடுத்து வர வேண்டும்.

செல்போன், கடிகாரம் மற்றும் எலக்ட்ரானிக்கல் டிவைஸ் சம்பந்தப்பட்ட எந்த பொருட்களும் தேர்வு வளாகத்திற்கு கொண்டு செல்ல அனுமதி இல்லை,

காலை 09.30 மணிக்கு மேல் வருகை தருபவர்கள் எக்காரணம் கொண்டும் தேர்வு வளகத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

தேர்வு எழுதுபவர்கள் தேர்வு முடிவுற்ற பின்னர் வருகை பதிவேட்டில் இடது கை பெருவிரல் ரேகை பதிவு செய்ய வேண்டியுள்ளதாலும், தேர்வாளர்களின் விவரங்களை சரிபார்த்த பிறகு தான் தேர்வு எழுதுபவர்கள் வெளியே செல்ல அனுமதிக் கப்படுவார்கள். மேலும் தேர்வு எழுதுபவர்கள் தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நுழைவுச்சீட்டில் கொடுக்கப்பட்டிருக்கும் அறிவுரைகளின்படி தேர்வு அறையில் நடந்து கொள்ள வேண்டும் என்பதை அரியலூர் மாவட்ட காவல்துறையின் சார்பாக தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

# திருவள்ளூர் நகராட்சியில் வீடு வீடாக வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் விண்ணப்ப படிவம் விநியோகம் : மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் நேரில் ஆய்வு



திருவள்ளூர் நவ 08 : திருவள்ளூர் நகராட்சி பகுதியில் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் செய்வதற்காக வீடுகள் தோறும் விண்ணப்ப படிவங்கள் வாக்குச் சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வழங்கும் பணியை மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

திருவள்ளூர் மாவட்டத்தில் 10 சட்டப் பேரவை தொகுதிகளில் வாக்காளர் பட்டியல் திருத்தப்பணிகள் மேற்கொள்வதற்காக வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் வீடுகள் தோறும் கடந்த 2 நாள்களாக விண்ணப்ப விநியோகம் தொடங்கி நடைபெற்று வருகிறது. இதற்கிடையே திமுகவைச் சேர்ந்த வாக்குச்சாவடி நிலை முகவர்கள் மூலம் விண்ணப்ப படிவம் மொத்தமாக பெற்று, வீடுகளில் விநியோகம் செய்யப்படுகிறது. இது போன்றவைகளால் முறைகேடு நடைபெறுவதற்கு வாய்ப்புள்ளதாக அதிமுகவினர் புகார் தெரிவித்து வருகின்றனர்.

இதைத்தொடர்ந்து வீடுகள் தோறும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் விண்ணப்ப படிவங்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் திருவள்ளூர் நகராட்சி பகுதியில் உள்ள பெரியகுப்பம் மேட்டுத் தெரு, எம்.ஜி.ஆர் நகர் பகுதியில் மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது, வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தம் மேற்கொள்வதற்கான விண்ணப்ப படிவங்களை வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வழங்கினர். அதைத் தொடர்ந்து நாள்தோறும் எத்தனை படிவங்களை வழங்கப்படுகின்றன என்பது குறித்து கேட்டறிந்தார்.

அதோடு படிவங்களை எவ்வாறு பூர்த்தி செய்து அளிக்கவும் என்பது குறித்தும், திரும்பவும் தங்களிடைமே அளிக்க வும் என்பது குறித்து விவரமாக எடுத்துரைக்க வும் என வாக்குச்சாவடி நிலை அலுவலர்களுக்கு அவர் ஆலோசனை வழங்கினார். அப்போது, திருவள்ளூர் நகராட்சி ஆணையாளர் தாமோதரன், வாக்குப் பதிவு அலுவலரும் வட்டாட்சியருமான பாலாஜி மற்றும் அதிகாரிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

# வந்தே மாதரம் 150ஆவது விழா: புதுச்சேரி முதலியார்பேட்டை காவல் நிலையத்தில் மாணவர்களின் இசை முழக்கம்!




புதுச்சேரி: நவ.8–

150 ஆவது வந்தே மாதரம் விழாவை முன்னிட்டு, புதுச்சேரி முதலியார்பேட்டை காவல் நிலையத்தில் வெள்ளிக்கிழமை (நவம்பர் 7, 2025) பள்ளி மாணவர்களின் தேச பக்திப் பாடல் முழக்கத்துடன் கோலாகலமான விழா நடைபெற்றது.

இந்த விழாவானது, எஸ்.பி. சௌத் செல்வம் அவர்களின் தலைமையில் வெகு சிறப்பாக நடத்தப்பட்டது. முதலியார் பேட்டை காவல் நிலைய ஆய்வாளர் கண்ணன் அவர்கள் முன்னிலை வகித்தார். மேலும், எஸ்.ஐ. அலாவுதீன் மற்றும் எஸ் ஐ ஜெயபிரகாஷ் அவர்களின் சிறப்பான ஏற்பாட்டில் இந்த தேசபக்தி நிகழ்ச்சி நடைபெற்றது.

விழாவின் முக்கிய அம்சமாக, பள்ளி மாணவர்கள் அனைவரும் உற்சாகத்துடன் ஒன்றிணைந்து வந்தே மாதரம் பாடலைப் பாடி, தேசப்பற்றை வெளிப்படுத்தினர். இந்த நிகழ்வு பார்வையாளர்களை வெகுவாகக் கவர்ந்தது.

இந்தச் சிறப்புமிக்க விழாவில், புதுச்சேரி பாரதிய ஜனதா கட்சியின் பொறுப்பாளர் வெற்றிச்செல்வம் அவர்கள் கலந்துகொண்டு, வந்தே மாதரம் பாடலின் வரலாற்றையும், தேசப் பற்றின் முக்கியத்துவத்தையும் எடுத்துரைத்துச் சிறப்புரையாற்றினார்.

வந்தே மாதரம் பாடலின் 150 ஆவது ஆண்டைக் கொண்டாடும் வகையில், முதலியார்பேட்டை காவல் நிலையத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சி, தேசப்பற்று உணர்வை ஏற்படுத்தும் வகையிலும், மாணவர்களுக்கு உத்வேகம் அளிக்கும் வகையிலும் அமைந்தது.

# வடமதுரை போலீசார் அதிரடி வேட்டை சூதாட்ட கும்பலிடம் 3.54250 பறிமுதல்..

திண்டுக்கல் நவம்பர் 8

திண்டுக்கல் மாவட்டம் வடமதுரை மற்றும் அய்யலூர் எரியோடு பாளையம் குஜிலியம்பாறை கோவிலூர் வேடசந்தூர் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் மாந்தோப்புக்களிலும் தென்னந்தோப்புக்களிலும் மலையோரங்களிலும் அவ்வப்போது சூதாட்ட கும்பல் அத்துமீறி நடந்து வந்தது இந்த நிலையில் போலீசார் கண்காணித்து வந்த போதிலும் காவல்துறையினருக்கு தெரியாமல் சில இடங்களில் நடப்பதாக தகவல் கிடைத்ததன் அடிப்படையில் வடமதுரை போலீசார் வேடசந்தூர் துணை கண்காணிப்பாளர் பவித்ரா உத்தரவின் அடிப்படையில் வடமதுரை காவல் ஆய்வாளர் நிதி குமார், சப் இன்ஸ்பெக்டர் வேலுமணி தலைமையிலான போலீசார் வடமதுரை திண்டுக்கல் சாலையில் முனியாண்டி கோவில் அருகில் சூதாடிய திண்டுக்கல் திருச்சி கரூர் மாவட்ட பகுதிகளை சேர்ந்த முக்கிய பிரமுகர்களான அடைக்கண், செந்தில்குமார், அருண்குமார், கருணாகரன், சக்திவேல், அழகர்சாமி, சம்பத், முத்துவேல், பிரசன்ன வெங்கடேஷ், முத்து விஜயபாண்டி, கமல் ராஜ், செந்தில், ஆகியோர்களைப் பிடித்து அவர்களிடம் இருந்து பணம் 3 லட்சத்து 54 ஆயிரத்து 250 ரூபாய் பணம் பறிமுதல் செய்யப்பட்டு வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். வடமதுரை போலீசார் திடீரென்று சோதனையில் ஈடுபட்டது வடமதுரை பகுதியில் சூதாட்ட கும்பலிடம் பணம் சிக்கியது பெரும் பரபரப்பு ஏற்படுத்தியது.



மனித சமூக விழிப்புணர்வு அமைப்பின் நிறுவனர் திரு.விஜயபாண்டி அவர்களின் தலைமையில் நடைபெற்ற முப்பெரும் விழாவில் தமிழ்நாடு பத்திரிகையாளர் நலச்சங்கம் தலைவர் எஸ். சரவணன் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துக் கொண்டார். அம்மா அரசு நாளிதழ் ஆசிரியர் திரு. பாரதிராஜா, மக்கள் மன்றம் ஆசிரியர் திரு. சிவக்குமார், ஊராட்சி உதயம் ஆசிரியர் ஜோதி உள்ளிட்ட பல்வேறு துறை சார்ந்த முக்கிய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர்.

# ஐப்பசி மாத பௌர்ணமி 108 திருவிளக்கு பூஜை மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலில் சிறப்பு வழிபாடு



விழுப்புரம், நவ. 8–

விழுப்புரம் மாவட்டம் பிரசித்தி பெற்ற மேல்மலையனூர் அங்காளம்மன் கோவிலில் ஐப்பசி மாத பௌர்ணமி தினத்தை முன்னிட்டு அதி காலை முதலே நடை திறக்கப்பட்டு மூலவர் மற்றும் உற்சவர் அங்காளம்மனுக்கு பால் தயிர் பன்னீர் உள்ளிட்ட வாசனை திரவியங்கள் கொண்டு அபிஷேகம் செய்யப்பட்ட பின் பல வண்ண மலர்கள் பட்டாடை கொண்டு அலங்காரம் செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து நீண்ட நெடு வரிசையில் காத்துக் கொண்டிருந்த பக்தர்கள் அங்காளம்மனை தரிசனம் செய்தனர்.

அதன் பின் மாலை 6:00 மணிக்கு மேல் சிறப்பு அலங்காரத்தில் உற்சவர் அங்காளம்மன் விளக்கு பூஜை விழா மண்டபத்திற்கு கொண்டுவரப்பட்டு ஐப்பசி மாத பௌர்ணமி 108 திருவிளக்கு பூஜை சிறப்பாக நடைபெற்றது.

இதில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி வைத்து அங்காளம்மனை வழிபாடு செய்தனர்.

நாடு நலம் பெற வேண்டி கூட்டு பிரார்த்தனையில் ஈடுபட்டனர். இந்நிகழ்ச்சியில் திருக்கோவில் உதவி ஆணையர் சக்திவேல் அறங்காவலர் குழு தலைவர் சேட்டு என்கிற ஏழுமலை அறங்காவலர்கள் சுரேஷ் மதி அழகன் பச்சையப்பன் சரவணன் வடிவேலு மற்றும் சந்தானம் பூசாரி மற்றும் திருக்கோவில் மேலாளர் சதீஷ் காசாளர் மணி மணியம் குமாரர் உள்ளிட்ட பூசாரிகள் கலந்து கொண்டனர்

# ஆடிப்போன ஆத்தூர் : பச்சை கலரில் சேலம் சந்திரா வீட்டில் பாம்பு. அது வாயில் என்ன இருந்தது தெரியுமா?

சேலம். நவ. 8–

சேலம், திருநெல்வேலி உள்ளிட்ட மாவட்டங்களின் சில பகுதிகளில் பாம்புகள் நடமாட்டம் அதிகரித்துள்ளதாம்.

அதிலும் குடியிருப்பு பகுதிகளிலேயே பாம்புகள் வருவது பொதுமக்களை அச்சத்துக்கு ஆளாகி வருகிறது. நேற்றைய தினம் மேற்கண்ட இரு மாவட்டங்களிலும் நடந்த சம்பவத்தின் அதிர்ச்சி, அந்தந்த பகுதி மக்களிடம் இன்னமும் நீங்கவில்லை.. எனினும் பாம்பை பிடித்த தீயணைப்பு வீரர்களுக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகின்றன.

ஏப்ரல், மே மாதங்களில், வெயிலின் தாக்கம் பொது மக்களை வாட்டி வதைத்து வரும்போது, அந்த வெப்பத்திறுக விலங்குகளும் பறவைகளும்கூட தப்புவதில்லை..

வெயிலின் தாக்கம் தாங்காமல் இருப்பிடத்தை விட்டு வெளியேறும் பாம்புகள் குடியிருப்பு பகுதிகளில் புகுந்து விடுகின்றன.. இதனால் பாம்புகளை கண்டால் அவற்றை பாதுகாப்பாக பிடித்து அப்புறப்படுத்த வேண்டும் என்பதற்காகவே, தீயணைப்பு துறை வீரர்கள் அல்லது பாம்பு பிடி வீரர்களை பொதுமக்கள் நாடுகின்றனர்.

பாம்புகளை பிடிக்க கருவி: தீயணைப்பு துறை வீரர்களிடம் பாம்புகளை பிடிக்க நவீன கருவி உள்ளதால், பாம்புகளை பிடித்து பாதுகாப்பாக வனப்பகுதியில் விட்டுவிடுகிறார்கள்.



கோடை காலங்களில் குடியிருப்பு பகுதிகளை தேடி பாம்புகள் வந்துவிடுவது வழக்கமாக இருக்கும் நிலையில் இப்போது குளிர்காலத்திலும் பாம்புகள் வீடுகள் உள்ள பகுதிகளுக்கு வந்துவிடுகின்றன.. இதனால் பொதுமக்களுக்கு ஒருவித அச்சம் தொற்றிவிடுகிறது.

நேற்றைய தினம் சேலம் மாவட்டம், நெல்லை மாவட்டங்களில் ஒரேநாளில் அம்மாவட்ட மக்களை கிலிக்கு ஆளாகியிருக்கின்றன பாம்புகள்.

சேலம் தோட்டத்தில் மலைப்பாம்பு: சேலம் மாவட்டம் கெங்கவல்லி அருகே கூடமலை ஊராட்சி, தெற்கு காட்டுக்கொட்டாயை சேர்ந்த விவசாயி ராஜேந்திரன்.. இவரது தோட்டத்தில் நேற்றைய தினம், மலைப்பாம்பு உள்ளதாக தகவல் பரவவும் அந்த பகுதி மக்கள் வெலவெலத்து போனார்கள்..

உடனே கெங்கவல்லி தீயணைப்பு நிலையத்துக்கு இதுகுறித்து தகவல் கிடைக்கவும், தீயணைப்பு வீரர்களும் ராஜேந்திரனின் தோட்டத்திற்கு விரைந்து சென்றனர். அங்கே 7 அடி நீளம் கொண்ட மலைப் பாம்பை உயிருடன் பிடித்து, கெங்கவல்லி வனத்துறையினரிடம் ஒப்படைத்தனர்… பிறகு வனப்பகுதியில் மலைப்பாம்பை பத்திரமாக விட்டனர். சந்திரா வீட்டில் பச்சை கலர் பாம்பு: அதேபோல இதே சேலம் ஆத்தூரில், சந்திரா என்பவரது வீட்டின் பின்பகுதியில் உள்ள மரத்தில், நேற்று மாலை, 4 மணிக்கு விநோத சத்தம் கேட்டுள்ளது..

இதனால் சந்திரா சென்று பார்த்தபோது, ஓணானை விழுங்கிய நிலையில் பச்சை நிறத்தில் பாம்பு இருந்ததை கண்டு அலறியடித்து ஓடிவந்துள்ளார்.. இதுகுறித்து உடனடியாக ஆத்தூர் தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் தரவும், அந்த 4 அடி நீள பாம்பை உயிருடன் பிடிக்கப்பட்டது.. பிறகு அந்த பாம்பும், ஆத்தூர் வனத்துறையினரிடம் பத்திரமாக ஒப்படைக்கப்பட்டது.

நெல்லையில் நல்ல பாம்பு: இதேபோல திருநெல்வேலி தச்சநல்லூர் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் நேற்றிரவு 10 மணிக்கு, நல்ல பாம்பு ஒன்று புகுந்துள்ளது.. இதை பார்த்து பயந்து போன அக்குடும்பத்தினர் தீயணைப்பு நிலையத்துக்கு தகவல் தந்து வீரர்களை வரவழைத்தனர்..

பிறகு பாம்பு இருந்த இடத்தை சுற்றி வளைத்து, அதனை பிடிக்கும் முயற்சியில் வீரர்கள் ஈடுபட்டனர். ஆனால் அந்த பாம்பு லேசில் பிடிபடவில்லை.. எனினும் நீண்ட நேர போராட்டத்துக்கு பிறகே பாம்பை லாவகமாக பிடித்து, சாக்குபையில் பத்திரமாக அடைத்தனர்..

6 நீள பாம்பு: பிடிப்பட்ட பாம்பு சுமார் 6 அடி நீளத்துக்கு இருந்ததாம்.. பிறகு வனத்துறையினரிடம் பாம்பு ஒப்படைக்கப்பட்டதையடுத்து, அவர்கள் அதை வனப்பகுதியில் கொண்டு போய் விட்டனர்.

தங்களது வீடுகளுக்கு அருகே பாம்புகள் நடமாட்டம் இருந்தால் உடனடியாக தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளனர். ஆனாலும், மழையும், குளிரும் தொடங்கியுள்ள இந்த நேரத்தில், குடியிருப்பு பகுதிகளிலேயே பாம்புகள் நடமாடுவது பொதுமக்களை கலக்கத்துக்கு ஆளாக்கி வருகிறது.

# வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் (பி.எல்.ஓ2) கடிதங்கள் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்
# திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரிடம் அதிமுக முன்னாள் அமைச்சர்கள், மாவட்ட செயலாளர்கள் மனு



திருவள்ளூர் நவ 08 : இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தலின் பேரில் திருவள்ளூர் மாவட்டத்தில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. இந்நிலையில், வாக்குச் சாவடி நிலை அலுவலர்களால் (பி.எல்.ஓ) வீடு வீடாகச் சென்று படிவங்கள் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது. ஆனால் பூர்த்தி செய்யப் பட்ட படிவங்கள் அரசியல் கட்சிகளின் வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஓ2) மூலமாக அதிகபட்சம் 50 படிவங்கள் பெற்றுவந்து வழங்கலாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளதாகத் தெரிகிறது.

இந்த பூர்த்தி செய்யப் பட்ட படிவங்கள் அரசியல் கட்சிகளின் வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஓ2) மூலமாகப் பெற்றால், முறைகேடுகள் நடைபெறுவதற்கு வாய்ப்பு உள்ளது. இது குறித்து அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி ஆலோசனையின் பேரில் முன்னாள் அமைச்சர்கள் பா.பென்ஜமின், மாதவரம் மூர்த்தி, பி.வி. ரமணா, மாவட்ட செயலாளர்கள் பொன்னேரி பலராமன், அம்பத்தூர் அலெக் ஸாண்டர் ஆகியோர் மாவட்ட ஆட்சியர் பிரதாப்பிடம் கோரிக்கை மனு அளித்தனர்.

வீடு வீடாகச் சென்று வழங்கப்படும் வாக்காளர் விபரங்கள் குறித்த பூர்த்தி செய்யப் பட்ட படிவங்கள், சம்மந்தப்பட்ட வாக்குச் சாவடி நிலை அலுவலர்களால் மட்டுமே பெறப்பட வேண்டும் என்றும் பிற கட்சிகளைச் சேர்ந்த வாக்குச் சாவடி நிலை முகவர்கள் (பி.எல்.ஓ2) அதிகளவில் மனுக்கள் வழங்கும் போது, அவர்களுக்கு வேண்டப் பட்டவர்களின் மனுக்களை மட்டும் அனுப்பி விட்டு மற்றவற்றை அனுப்பாமல் இருக்கவும் வாய்ப்பு இருப்பதால் தீவிரமாக கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அமைச்சர் பென்ஜமின் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட மாணவரணி செயலாளர் பி.வி.பாலாஜி உட்பட ஒன்றிய, நகர, பெருர் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திருச்சி மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத்திருத்தம்;

திருச்சி நவ. 8–

இந்திய தோ;தல் ஆணையத்தின் உத்தரவின்படி 01.01.2026 ஐத் தகுதி ஏற்பு நாளாகக் கொண்டு தகுதியுள்ள நபர்கள் எவரும் வாக்காளர் பட்டியலில் விடுபடவில்லை என்பதையும், தகுதியற்ற நபர்கள் யாரும் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்பதையும் உறுதிசெய்யும் பொருட்டு, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்குட்பட்ட 09 சட்டமன்ற தொகுதி களிலும் 04.11.2025 அன்று முதல் சிறப்பு தீவிரத்திருத்த பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட சிறப்பு தீவிரத்திருத்த பணியில் திருச்சிராப் பள்ளி மாவட்டத்திற் குட்பட்ட 09 சட்டமன்ற தொகுதிகளிலும் 2543 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் வீடு வீடாக சென்று வாக்காளர் களுக்கு முன்நிரப்பப் பட்ட கணக்கெடுப்பு படிவங்கள் வழங்கிடும் பணியில் முழுமையாக ஈடுபட்டு வருகின்றனர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்குட்பட்ட 09 சட்டமன்ற தொகுதி களிலும் 23,68,968 எண்ணிக்கையிலான மொத்த வாக்காளர்களில், நாளது தேதி வரை 5,50,497 எண்ணிக்கை யிலான வாக்காளர் களுக்கு முன்நிரப்பப் பட்ட படிவங்கள், வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலம் விநியோகம் செய்யப் பட்டு, முன்நிரப்பப்பட்ட படிவங்களை பூர்த்தி செய்த வாக்காளா; களிடமிருந்து மீள பெறப்படும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

மேலும் 141. திருச்சிராப்பள்ளி (கிழக்கு) மற்றும் 142. திருவெறும்பூர் ஆகிய சட்டமன்றதொகுதிகளில் நடைபெறும் சிறப்பு தீவிரத்திருத்த பணியினை திருச்சிராப்பள்ளி மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவா; அவர்கள் நேரடியாக ஆய்வு செய்தும் பணி முன்னேற்ற அறிக்கை களை கேட்டறிந்தார். மேலும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வாக்காளர்களுக்கு முன்நிரப்பப்பட்ட கணக் கெடுப்பு படிவங்கள் வழங்கிடும் பணியில் தொய்வு ஏற்படா வண்ணம் தொகுதிகளுக்கு கூடுதல் அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு, பணி துரிதப்படுத்தப் பட்டுள்ளது.

## அரசு மேல்நிலைப் பள்ளி மாணவ மாணவியருக்கு டேபிள் மேஜை வழங்கிய சுங்கச்சாவடியினர்.



மணப்பாறை நவம்பர் 8

திருச்சி மாவட்டம் வையம்பட்டி அருகே உள்ள நடு பட்டியில் அரசு மேல்நிலைப்பள்ளி இயங்கி வருகிறது இப்பள்ளியில் ஆறாம் வகுப்பு மாணவ மாணவியர் சுமார் 36 பேர் கல்வி பயின்று வருகின்றனர் பள்ளியில் தரையில் அமர்ந்து கல்வி பயிலும் மாணவ மாணவியருக்கு தேசிய நெடுஞ்சாலை துறை தலைமையில் பொன்னம் பலம்பட்டி சுங்கச்சாவடியினர் பள்ளிக்கு மாணவர்கள் அமரவும் எழுதுவதற்கு பயன்படும் வகையில் மேஜை மற்றும் டேபிள் 60 ஆயிரம் மதிப்புள்ள பொருட்கள் வழங்கப் பட்டது விழாவிற்கு வருகை தந்தவர்களை வரவேற்கும் வகையில் இளைஞர் சாரண சாரணியர் இயக்க மாணவர்கள் வணக்கம் செலுத்தி வரவேற்றுடன் பள்ளியின் தலைமை ஆசிரியர் மலர் கொத்து கொடுத்து தேசிய நெடுஞ்சாலைத்துறை திட்ட இயக்குனர் பிரவீன் குமாரை வரவேற்று பள்ளியின் வகுப்பறையை ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார், தேசிய நெடுஞ்சாலை துறை திட்ட மேலாளர் செந்தில்குமரன், டீம் லீடர் மகேஷ் ராஜ் குமார், ரெசிடென்சியல் இன்ஜினியர் அருள் சுப்பிரமணியம், மற்றும் பள்ளியின் ஆசிரிய ஆசிரியர்கள் மாண வர்கள் சுங்கச்சாவடி ஊழியர்கள் மற்றும் பணியாளர்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர் விழாவில் சுங்க சாவடி மேலாளர் பெரியராஜ் வரவேற்று துவக்கி வைத்து. கலந்து கொண்ட மாணவ மாணவியர்கள் உடன் திட்ட இயக்குனர் பிஸ்கட் வழங்கி அவர் களுடன் கலந்துரை யாடினார்.

## அரியர் தேர்வு வினாத்தாள் மாறிய விவகாரம் குழு அமைப்பு

நெல்லை: நவ. 8–

நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை.யில் நேற்று அரியர் தேர்வு வினாத்தாள் மாறிய விவகாரம் தொடர்ப்பாக தவறு செய்தவர்கள் யார் என்று கண்டறிய பல்கலை. நிர்வாகம் குழு அமைத்தது. நெல்லை மனோன்மணியம் சுந்தரனார் பல்கலை.யின் கீழ் 108 கல்லூரிகள் இயங்குகின்றன. நேற்று பி.காம் மூன்றாமாண்டு மாணவர்களுக்கான மேனேஜ்மென்ட் அக்கவுண்ட் தேர்வு நடைபெற்றது. மேனேஜ்மென்ட் அக்கவுண்ட் வினாத்தாளுக்கு பதில் ரீடைல் மேனேஜ்மென்ட் வழங்கப்பட்டதால் அதிர்ச்சி ஏற்பட்டது.

# சேலத்தில் 2 முதாட்டிகளை கொன்ற கொடூர அரக்கன் என்னும் அய்யனார்.
## சேலத்தில் துப்பாக்கியால் சுட்டு பிடிக்கப்பட்ட அய்யனார் யார்? நடுங்க வைக்கும் தகவல்.



சேலம். நவ. 8–

சேலத்தில் 2 மூதாட்டிகளை கொன்று நகைகளை கொள்ளை யடித்து உடல்களை கல்குவாரி யில் வீசி சென்ற வழக்கில் அய்யனார் என்பவரை இன்று போலீசார் துப்பாக்கியால் சுட்டு பிடித்தனர்.

இந்நிலையில் தான் அந்த அய்யனார் யார்? பின்னணி என்ன? என்பது பற்றிய திடுக்கிட வைக்கும் தகவல் வெளியாகி உள்ளது.

சேலம் மாவட்டம் இளம் பிள்ளை அருகேஇடங்கணசாலை தூதனூர் காட்டுவளவு கல்குவாரியில் கடந்த 4ம் தேதி 2 மூதாட்டிகள் இறந்து கிடந்தனர். இதுபற்றி தகவல் அறிந்தவுடன் போலீசார், தீயணைப்பு வீரர்கள் விரைந்து சென்று இருவரின் உடல்களை கைப்பற்றி விசாரணை மேற்கொண்டனர்.

அப்போது தூதனூர் காட்டுவளவு பகுதியை சேர்ந்தவர் அண்ணாமலையின் மனைவியும், பெரியம்மா( வயது 75)என்பதும், இ.காட்டூர் பகுதியை சேர்ந்த மாரிமுத்து மனைவி பாவாயி (70) என்பதும் தெரியவந்தது.

இதில் பெரியம்மா ஆடு மேய்க்கவும், பாவாயி விவசாய கூலி வேலைக்கும் சென்ற நிலையில் இருவரும் சடலமாக மீட்கப்பட்டது தெரியவந்தது. அதோடு பெரியம்மா அணிந்திருந்த இரண்டு கம்மல், மூக்குத்தி, கால் காப்பு. பாவாயி அணிந்திருந்த கம்மல், கால் காப்பு ஆகியவை மாயமாகி யிருந்தது. இதனால் நகைக்காக அவர்கள் 2 பேரும் கொலை செய்யப்பட்டு இருக்கலாம் என்று போலீசார் கருதினர்.

இதுதொடர்பாக 3 தனிப் படை அமைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்நிலையில் தான் சேலம் அடுத்த கருப்பூர், வெள்ளாளபுரம் பகுதியைச் சேர்ந்த அய்யனார்(55) என்பவரை போலீசார் துப்பாக்கியால் சுட்டு பிடித்தனர். இவர் ஒருக்கா மலை அடிவாரத் தில் பதுங்கி இருந்தார். அவரை போலீசார் இன்று காலையில் பிடிக்க சென்றனர். அப்போது அவர் போலீஸ்காரரின் கையில் அரிவாளால் வெட்டினார்.

இதையடுத்து தற்காப்புக்காக அய்யனாரை போலீசார் துப்பாக்கியால் சுட்டனர். இதில் காலில் காயமடைந்த அய்யனார் சுருண்டு விழுந்தார். அவரை போலீசார் கைது செய்தனர். அரிவாள் வெட்டு காயமடைந்த போலீஸ்காரர் மற்றும் கொலையாளி அய்யனார் ஆகியோர் சேலம் அரசு மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட் டுள்ளனர். அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் தான், துப்பாக்கி யால் சுட்டு பிடிக்கப்பட்ட அய்யனார் பற்றிய திடுக்கிட வைக்கும் தகவல் வெளியாகி உள்ளது. அவர் மீது ஏற்கனவே 5 கொலை வழக்கு பதிவாகி உள்ளது. மேலும் 7 ஆண்டு சிறை தண்டனை பெற்றார்.

அதன்பிறகு அவர் கடந்த 2019ம் ஆண்டு சிறையில் இருந்து வெளியே வந்துள்ளார். அதன்பிறகும் கூட அய்யனார் திருந்தவில்லை. அவர் நகைகளை கொள்ளையடித்து 2 மூதாட்டிகளை கொன்று கல்குவாரியில் வீசியதோடு, பிடிக்க சென்ற போலீஸ்காரரை அரிவாளால் வெட்டி இப்போது குண்டு காயமடைந்து சிகிச்சையில் உள்ளார்.

## அரியலூர் சர்தார் வல்லபாய் பட்டேலின் பெருமைகளை இளைஞர்கள் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் கையில் தேசிய கொடியை ஏந்தியவாறு மாணவ மாணவிகள் ஒற்றுமை பேரணியில் கலந்து கொண்டனர்




அரியலூர். நவ. 8–

சுதந்திரத்திற்குப் பிறகு பல துண்டுகளாக இருந்த இந்தியாவை ஒன்றிணைத்து வலுவான இந்தியாவாக வடிவமைத்து நாட்டின் மிகப்பெரிய ஜனநாயக நாடாக உருவாக்கிய பெருமை சர்தார் வல்லபாய் பட்டேலையே சாரும். இதனாலேயே இந்தியாவின் இரும்பு மனிதர் எனவும் அழைக்கப்படுகிறார். இவ்வாறு பெருமை வாய்ந்த சர்தார் வல்லபாய் பட்டேலின் 150வது பிறந்த நாளை இந்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு அமைச்சகத்தின் மை பாரத் இயக்கத்தின் மூலம் ஒற்றுமை பாதயாத்ரா நடைபெற்றது. அரியலூர் மாவட்டம் வி.கைகாட்டியில் தொடங்கிய ஒற்றுமை பேரணியை அரியலூர் பெரம்பலூர் மாவட்ட மைபாரத் இளையோர் மாவட்ட அலுவலர் கீர்த்தனா தொடங்கி வைத்தார். பேரணியில் பொய்யூர் அரசு மேல்நிலைப்பள்ளி மாணவ மாணவிகள் தனியார் பொறியியல் கல்லூரி மாணவ மாணவிகள் கலந்து கொண்டு கைகளில் தேசிய கொடியை ஏந்தியவாறு பேரணியாக சென்றனர் வி.கைக் காட்டியில் தொடங்கிய இந்த ஒற்றுமை பேரணி ரெட்டிப்பாளையம், மயிலாண்டகோட்டை உள்ளிட்ட கிராமங்களின் வழியாக சென்று புதுப்பாளையத்தில் உள்ள தனியார் பொறியியல் கல்லூரியில் முடிவடைந்தது இதனையடுத்த கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சர்தார் வல்லபாய் பட்டேலின் பெருமைகள் அவர் நாட்டிற்கு செய்த தொண்டுகள் ஆகியவை குறித்து மாணவர்களுக்கு எடுத்துரைக்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் மை பாரத் இயக்க அலுவலர்கள் அரசு பள்ளி ஆசிரியர்கள் கல்லூரி பேராசிரியர்கள் காவலர்கள் பொதுமக்கள் என ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்



திருவெண்ணைய்நல்லூரில்.இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் 108 வது ரஷ்ய புரட்சி தினத்தையொட்டி செங்கொடி ஏற்றப்பட்டது. விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைய்நல்லூரில் சுத்தியல் அருவாள் பதித்த செங்கொடியை மூத்த தலைவர் ஆர்.ராமமூர்த்தி ஏற்றிவைத்தார் இந்நிகழ்வில் நகர செயலாளர். டி எஸ் முருகன் தலைமை தாங்கினார் ஒன்றிய செயலாளர் செல்வகுமார் மாவட்ட குழு உறுப்பினர் மணிகண்டன் . ஒன்றியக்குழு உறுப்பினர் ஆர் கே குமார், அய்யனார், வெங்கிடேசன் கிளை செயலாளர்கள் ஆமூர் ஏழுமலை , இருவேல்பட்டு அன்பழகன் , சரவண பாக்கம் கூட்டு ரோடு நாராயணன் பெரியசெவலை கணபதி உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டு செங்கொடி ஏற்றி வைத்து இனிப்பு வழங்கப்பட்டது.

## மணப்பாறையில் 108 வது நவம்பர் புரட்சி தின கொண்டாட்டம்



மணப்பாறை நவ 08

மணப்பாறை கோவில் பட்டி சாலையில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில், நேருஜி நகரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கொடி ஏற்றி நவம்பர் புரட்சி தின கொண்டாட்டம் நடை பெற்றது

கட்சி அலுவகத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தெற்கு ஒன்றிய செயலாளர் ராஜேந்திரன் தலைமை வகித்தார் நகர துணைச் செயலாளர் தங்கராஜ் திருநாவுக்கரசு பொருளாளர் மரியராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

மூத்த தோழர் ராஜ் புரட்சிதின கொடியை ஏற்றிவைத்தார் ஏஐடியூசி மாவட்ட செயலாளர் சுப்ரமணியன் சிபிஐ புறநகர் மாவட்ட துணைச் செயலாளர் பழனிச்சாமி புறநகர் மாவட்ட பொருளாளர் ஜனசக்தி உசேன் ஆகியோர் உரைநிகழ் தினார்கள் நேருஜீ நகரில் நகர்மன்ற உறுப்பினர் மனோன்மணி கொடி ஏற்றிவைத்தார் இன்நிகழ்வுகளில் சிபிஐ நகரகுழு உறுப்பினர்கள் அருள் ஆரோக்கியம் செல்வராஜ் ரோணுகா முரளி ராஜா ஆரிப் இப்புராகிம் சௌக்கத்அலி பிரகாஷ் லாரன்ஸ் மைக்கல் தெற்கு ஒன்றிய குழு உறுப்பினர்கள் ரவிசந்திரன் தங்கராசு கணேசன் பொண்ணுச் சாமி சின்னகண்ணு வெள்ளத்துரை சிவ ஞானம் கல்யாணசுந்தரம் சீராஜுதீன் வடக்கு ஒன்றியகுழு உறுப் பினர்கள் பழனிச்சாமி கணேசன் சண்முகம் ரமையா நல்லுச்சாமி மருங்காபுரி ஒன்றிய துணைச்செயலாளர் கோவிந்தராஜ் ஏஐடியுசி போக்குவரத்து கழக மண்டல மாவட்ட பொது செயலாளர் சுந்தர்ராஜ் மலையான்டி உட்பட கட்சி மற்றும் வெகுஜன அரங்கா நிர்வாகிகள் கலந்து கொண்டு புரட்சி தின வீரமுழக்கமிட்டனர்.

# ஜவுளிப் பூங்காவில் சாயப்பட்டறை அமைந்தால் நிலத்தடிநீர் மாசுபடும் சேலத்தில் அன்புமணி விளக்கம்.

சேலம் , நவ. 8–

சேலத்தில் அமையவிருக்கும் ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்காவில் சாயப்பட்டறைகள், சுத்திகரிப்பு நிலையம் அமைந்தால் நிலத்தடிநீர் மாசுபடும் என பாமக தலைவர் அன்புமணி கூறினார்.



சேலம், வாழப்பாடி அருகே அருள் ஆதரவாளர்களுடன் ஏற்பட்ட மோதலில் காயமடைந்து தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ள பெத்த நாயக்கன் பாளையம் பகுதியைச் சேர்ந்த செந்தில்குமரன், ராஜேஷ்குமார் உள்ளிட்டோரை வியாழக்கிழமை சந்தித்து ஆறுதல் கூறிய அன்புமணி, அவர் களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்.

அப்போது, அவரைச் சந்தித்த விவசாயிகள், பொதுமக்கள் சேலம் ஜாகிர்அம்மாபாளையம் பகுதியில் அமையும் ஜவுளிப் பூங்காவில் சாயப்பட்டறை, சுத்திகரிப்பு நிலையம் அமைவதால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து கவலை தெரிவித்தனர்.

அதன் பிறகு, காமலாபுரம் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் அன்புமணி கூறியதாவது:

வரும் தேர்தலில் திமுக படுதோல்வி அடையும். தென் மாவட்டத்திற்குச் சென்றால் கனிம வளம் கொள்ளை, டெல்டா மாவட்டத்தில் மணல் கொள்ளை என பல்வேறு குற்றச்சாட்டுகளால் திமுக அரசு மீது மக்கள் அதிருப்தியடைந்துள்ளனர். ஜாதிவாரி கணக்கெடுப்பை நடத்த திமுக அரசு மறுத்து வருகிறது.

நகராட்சி நிர்வாகத் துறையில் 2,500 அதிகாரிகள் நியமனத்தில் ரூ.858 கோடி ஊழல் நடைபெற்றுள்ளதாக அமலாக்கத் துறை ஆதாரங்களுடன் தமிழக காவல் துறைக்கு அறிக்கை அளித்துள்ளது. தமிழகத்தின் கடன் சுமை அதிகரித்துள்ள நிலையில், தொழில் முதலீடு பெருகியுள்ளதாக முதல்வர் தொடர்ந்து தவறான தகவலை கூறிவருகிறார்.

சேலம் மாவட்டத்தில் சரபங்கா நதியைப் பார்வையிட்டேன். சுவையான தண்ணீர் வரும் இந்த நதியில் 10 கி.மீ கடந்தால் தண்ணீர் சாக்கடையாக மாறி வருகிறது. இதேபோல, திருமணிமுத்தாறு, வசிஷ்ட நதிகள் சாக்கடையாக மாறிவிட்டன. சரபங்கா நதிநீரை பனபரத்துப்பட்டி ஏரியில் கொண்டுவந்து சேர்க்க வேண்டும். இதன்மூலம் சேலம் மாநகராட்சியின் குடிநீர் பிரச்னைக்கு தீர்வு ஏற்படும்.

சேலம் நகர்ப் பகுதியில் அமையவிருக்கும் ஜவுளிப் பூங்காவில் சாயப் பட்டறையை அமைக்க உள்ளனர். ஜவுளிப் பூங்கா வர எங்களுக்கு எந்த பிரச்னையும் இல்லை. அங்கு, சாயப்பட்டறை, சுத்திகரிப்பு நிலையம் அமைவதை கடுமையாக எதிர்க்கிறோம். இதை எதிர்த்து எனது தலைமையில் போராட்டம் நடத்தப்படும். இத்திட்டம் வந்தால் சேலம் மாநகரம் அழிந்துவிடும்.

மேலும், நிலத்தடி நீர்மட்டம் குறைவதுடன் தண்ணீர் மாசுபடும். சாயப்பட்டறை கழிவு மிகவும் மோசமானது. இதனால்தான் பவானி ஆறு, நொய்யல் ஆறுகள் மாசடைந்துள்ளன. திருப்பூர் நகரமே சாயக் கழிவாக உள்ளது. இதுபோன்ற பிரச்னை சேலத்துக்கு வரக்கூடாது.

ஜவுளிப் பூங்காவில் வியாபாரம் மட்டும் செய்ய வேண்டும். அதில் சாயக்கழிவு பட்டறைகளை கொண்டுவரக் கூடாது. இதுகுறித்து அரசு உறுதி அளித்தால்தான் ஜவுளிப் பூங்கா அமைய அனுமதிப்போம் என்றார்.

# கோவை கல்லூரி மாணவி பாலியல் பலாத்காரம் செய்த குற்றவாளிகளை தூக்கிலிட கோரி காங்கிரஸ் மனித உரிமை துறை சார்பில் ஆர்ப்பாட்டம்!!!



கோவை நவ:08

கோவை விமான நிலையம் பின்புறம் கல்லூரி மாணவி கூட்டு பலாத்காரம் செய்த குற்றவாளியை தூக்கிலிட வேண்டும் கோரிக்கை வைத்து தமிழ்நாடு காங்கிரஸ் மனித உரிமை துறை சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் தமிழ்நாடு காங்கிரஸ் மனித உரிமை துறை மாநில செயலாளர் இமயம் ரஹ்மத்துல்லா தலைமையில் நடைபெற்றது. பின்னர் செய்தியாளர்களை சந்தித்து பேசிய மாநில செயலாளர் இமயம் ரஹமத்துல்லா குற்றவாளிகள் இதுபோல சமூக விரோத செயலில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இந்த விவகாரத்தில் கோவை மாநகர் காவல்துறை மற்றும் தமிழக முதல்வர் உத்தரவின் பேரில் குற்றவாளியை பிடித்ததற்கு நன்றி தெரிவித்தனர்.

# பி. கொசவபட்டி ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம்.



திண்டுக்கல், நவ. 8–

மாவட்டம். வடமதுரை அருகே உள்ள P கொசவபட்டி கிராமத்தில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாம் நேற்று நடைபெற்றது. இந்த திட்ட முகாம் அந்த கிராமத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி வளாகத்தில் நடந்தது. இந்நிகழ்ச்சிக்கு வடமதுரை திமுக மேற்கு ஒன்றிய செயலாளர் சுப்பையன் தலைமை தாங்கினார். மேற்கு மாவட்ட இலக்கிய அணி இளங்கோ, நெசவாளர் அமைப்பாளர் சொக்கலிங்கம் முன்னிலை வகித்தனர். கொசவபட்டி,எட்டி குளத்துப்பட்டி சுந்தரபுரி, பாப்பிநாயக்கன் பட்டி, சிக்கு போல கவுண்டன்பட்டி ஆகிய ஊர்களில் வசிக்கும் மக்கள் கலந்து கொண்டு கோரிக்கை மனுக்களை அளித்தனர். பொதுமக்களிடம் பெறப்பட்ட மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு உடனடியாக தீர்வு காணப்பட்டது. குறிப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, ஆதார் அட்டையில் பல்வேறு திருத்த சேவைகள், ரேஷன் கார்டு பெயர் சேர்த்தல், நீக்குதல் ,செல்போன் எண் மாற்றுதல், மற்றும் குடும்ப உறுப்பினர் பெயர் சேர்த்தல்மற்றும் பல்வேறு திருத்தங்கள், வருவாய் துறை ஆவணங்கள் சம்பந்தப் பட்ட பொதுமக்களின் குறைகளுக்கு உடனடியாக தீர்வு காணப் பட்டது. இம்முகாமில் ஊரக வளர்ச்சி துறை, வருவாய்த்துறை, வீட்டு வசதி மற்றும் நகர்ப் புறத்துறை ,கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை,மின்வாரியம், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை , தகவல் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை,வேளாண்மை துறை, எரிசக்தித்துறை, பிற்பட்டுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப் பட்டோர் மற்றும் சிறுபான்மை நலத்துறை உட்பட பல்வேறு துறை அரசு அதிகாரிகள் கலந்து கொண்டு கோரிக்கை மனுக்களை பொதுமக்களிடம் இருந்து பெற்றனர். மேலும் இம்முகாமில் திமுக முக்கிய நிர் வாகிகள் பண்ணை சுப்பையா, சுப்புராமன், ஆனந்தி அறிவுக் கண்ணன், ஜீவா, அன்பழகன் ,கருப்பையா, ஆகியோர் கலந்து கொண்டனர்.மேலும் வேடசந்தூர் வட்டாட்சியர் மணிமொழி வடமதுரை ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் பஞ்சவர்ணம் (கி.ஊ) மற்றும் அரசு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# 11 ஆம் ஆண்டு வருடாபிஷேகங்கள் நடைபெற்றது



திருச்சி மாவட்டம் துவரங்குறிச்சியில் அமைந்துள்ள ஸ்ரீ அருள்மிகு பூதநாயகி அம்பிகை ஆலய 11 ஆம் ஆண்டு வருடாபிஷேகங்கள் சிறப்பாக நடைபெற்றது இந்நிகழ்வில் ஏராளமான பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



திருச்சி மாவட்டம் மணப்பாறை வட்டம் வையம்பட்டி ஒன்றியம் புதுவாடி கிராமம் புதூரில் அரசுக்கு சொந்தமான உறக்கினர். உள்ளதாகவும் இதனை பராமரிப்பு இல்லாமல் கட்டிட கழிவுகளை நிரப்பி மூடுவதற்கு முயற்சி செய்வதாகவும் சமூக ஆர்வலர்களும் ஊர் பொதுமக்களும் கண்டனம் தெரிவித்துள்ளனர். அரசு முன்வந்து இந்த உரக்கினரை பராமரிப்பு பணிகள் செய்து இரும்பு கம்பி மூடாக்கு அமைத்து தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். அரசு அதிகாரிகள் பராமரிப்பு செய்ய முன்வர்களா???

# கைத்தறி பூங்கா அமைக்கும் பணி தொடக்கம்.



சேலம் மேற்கு மாவட்டம்,நங்கவள்ளி மத்திய ஒன்றியத்திற்குட்பட்ட வனவாசி பகுதியில்,சிறிய அளவிலான கைத்தறி பூங்கா அமைக்கும் பணிக்காக,கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி அவர்கள் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.ராஜேந்திரன் இணைந்து அடிக்கல் நாட்டி வைத்து,நெசவாளர்களுக்கான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், மாநிலங்களவை உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம் அவர்களோடு இணைந்து கலந்து கொண்டு,விழாவை சிறப்பித்த சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி.இந்நிகழ்வில்,துறை சார்ந்த அதிகாரிகள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பெருமளவில் கலந்து கொண்டு மிகுந்த உற்சாகத்துடன் விழாவை சிறப்பித்தனர்.

# திருத்தணி சுப்பிரமணிய சுவாமி அரசினர் கலை கல்லூரியில் 20 லட்சம் மதிப்பீட்டில் குடி தண்ணீர் பிரச்சனையை தீர்க்கும் வகையில் ஆழ்துளை கிணறு பூஜையுடன் தொடங்கி வைத்தார் சட்டமன்ற உறுப்பினர் சந்திரன்.....



திருத்தணிநவம்பர்08

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி அருகே சென்னை திருப்பதி தேசிய நெடுஞ் சாலையில் அருள்மிகு சுப்பிரமணியசாமி அரசினர் கலைக் கல்லூரி செயல்பட்டு வருகிறது இந்த கலைக் கல்லூரியில் முதுநிலை பட்டம் மற்றும் இளநிலை பட்டத்தில் படிப்பதற்கு மூன்றாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்கள் பயின்று வருகின்றனர்

இந்த கல்லூரியில் குடிதண்ணீர் பிரச்சினை நீண்ட காலமாக இருந்தது இதற்கு தீர்வு ஏற்படுத்தும் வகையில் திருவள்ளூர் மேற்கு திமுக மாவட்ட செயலாளர், திருத்தணி சட்டமன்ற உறுப்பினர் எஸ். சந்திரன் இந்த கல்லூரிக்கு ரூபாய் 20 லட்சம் மதிப்பீட்டில் ஆழ்துளை கிணறு அமைத்து அருகில் உள்ள விநாயகபுரம் ஏரியிலிருந்து தண்ணீர் எடுத்து வந்து குடிதண்ணீருக்கு இந்த கல்லூரி மாணவர்களுக்கு பயன்படுத்துவதற்கான நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது இந்நிகழ்ச்சியை பூஜையுடன் தொடங்கி வைத்து கல்லூரி மாணவர்களுக்கு மற்றும் பேராசிரியர்களுக்கு இனிப்புகள் வழங்கினார் சட்டமன்ற உறுப்பினர் சந்திரன் இந்த நிகழ்வில் கல்லூரியின் முதல்வர் ஏகாதேவசேனா, ஒன்றிய செயலாளர் ஆர்த்தி ரவி, மாவட்ட பிரதிநிதி ஷெரிப் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

# வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்திற்கு எதிராக மாணவர்கள், இளைஞர்களிடத்தில் பிரசாரம்: திமுக மாணவர் அணி அறிவிப்பு

சென்னை: நவ.8–

வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தத்திற்கு எதிராக மாணவர்கள், இளைஞர்களிடத்தில் பிரசாரம் மேற்கொள்ளப்படும் என்று திமுக மாணவர் அணி அறிவித்துள்ளது. திமுக மாணவர் அணியின் மாவட்ட, மாநகர அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,புதுச்சேரி மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டம் இன்று நடந்தது. கூட்டத்திற்கு மாநிலச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி தலைமை தாங்கினார்.

இதில் அமைச்சர் ராஜேந்திரன், மாவட்டச் செயலாளர்கள் எஸ்.ஆர். சிவலிங்கம் எம்.பி., டி.எம்.செல்வகணபதி எம்.பி, மாநில துணைச் செயலாளர்கள் மன்னை த.சோழராஜன், சேலம் இரா. தமிழரசன், அதலை பி.செந்தில்குமார், தமிழ் கா.அமுதரசன், பி.எம்.ஆனந்த், வி.ஜி.கோகுல், திருமதி பூர்ணசங்கீதா சின்னமுத்து, திருமதி ஜெ.வீரமணி, ஜெ.இராமகிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கூட்டத்தில் எஸ்ஐஆர் எனும் இந்திய மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் பாஜகவின் சுயமைத்தனத்துக்கு எதிராகக் திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னெடுக்கும் அனைத்து வகை அறப்போராட்டத்துக்கு மாணவர் அணி சார்பில் வலுச்சேர்க்க வேண்டும். பீகாரில் நடந்த குளறுபடிகளை சரிசெய்யாமல், தமிழ்நாடு உள்ளிட்ட 12 மாநிலங்களுக்கு எஸ்ஐஆர் திட்டத்தை செயல்படுத்துவது மக்களின் வாக்குரிமையைப் பறிப்பதாகவும், ஜனநாயகத்தை குழிதோண்டி புதைப்பதாகவும் உள்ளது.

தேர்தலுக்கு சில மாதங்களுக்கு முன்பு வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் கொண்டு வருவது வாக்காளர்களை நீக்கும் தந்திரம். பீகாரில் நடந்த இப்பணிக்கு எதிரான வழக்கில் இறுதி உத்தரவு இன்னும் பிறப்பிக்கவில்லை. இச்சூழலில் தமிழகத்தில் இதைச் செய்வது ஜனநாயகத்துக்கு எதிரானது. இதற்கு எதிராக அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி நீதிமன்றத்தை நாடியிருக்கிறார் தலைவர் மு.க.ஸ்டாலின். தலைவரின் சட்டப் போராட்டம் வெற்றிபெறும்.

கருத்தியல் ரீதியாக மாணவர்களிடமும் இளைஞர்களிடமும் மாணவர் அணி எஸ்ஐஆர்க்கு எதிராகப் பிரசாரத்தை மேற்கொண்டு தலைவர் மு.க.ஸ்டாலினின் கருத்துக்கு வலுசேர்க்கும். நவம்பர் 11ம் தேதி நடைபெறும் ஆர்ப்பாட்டத்தில் மாணவர் அணி சார்பில் பெருந்திரளாகக் கலந்துகொள்ள வேண்டும். ‘எனது வாக்குச்சாவடி, வெற்றி வாக்குச்சாவடி இருநூறு தொகுதிகளில் வெற்றி’ என்ற தலைவர் மு.க.ஸ்டாலினின் முழக்கத்தை நிறைவேற்றுவோம் உள்பட 11 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421